# மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
## Mount Druitt Tamil Study Centre

Mobile: 0449 892 066

Email :mtdruitttsc@gmail.com Web : www.mtsc.org.au



**செய்தி மடல் 2021 – 0 3** 28-08-2021


**"தமிழர்களுக்கு தமிழ்**
**வெறும் மொழியல்ல !**
**உயிர் . . .**
**முகம் . . .**
**முகவரி . . .**
**அடையாளம்.**
**மொழி இல்லையேல் பண்பாடும், வரலாறும் அழிந்து போகும்...".** இச்சிறப்புப் பெற்ற நம் **தமிழ்மொழியைக்** கற்பிக்கும் தலையாய கடமையை செவ்வனே செய்யும் மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம் தமிழை மட்டுமன்றி மாணவர்களை பண்பு, ஒழுக்கம், பணிவு, தன்னம்பிக்கை, ஆளுமை கொண்ட சிறந்த மாணவர்களாக உருவாக்கி வருகின்றது. தற்பொழுது மாணவர்களை HSCல் தமிழை ஒரு பாடமாக எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளில் முனைப்புடன் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. இச்சமுகக் கடமையுடைய எமது கல்வி நிலையத்தில் தமிழை கற்றிட வந்திருக்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் அன்பான வணக்கங்கள். இச்செய்திமடல் மூலம் பின்வரும் விடயங்களை உங்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.

### 1. *அரையாண்டுப் பரீட்சை*

மாணவர்களுக்கான அரையாண்டுப் பரீட்சை கடந்த தவணையில் வகுப்பு ஆசிரியர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்டுள்ளது. எனவே பரீட்சையில் தங்களது பிள்ளைகளின் பெறுபேறுகள் தொடர்பான விபரங்களை உங்களது பிள்ளைகளின் வகுப்பு ஆசிரியர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளவும்.

### 2. *கலாநிதி இளங்கோ வேந்தனார் ஞாபகார்த்த புலமைப் பரீட்சை* (Federation Exam)

இந்த வருடமும் எமது பாடசாலை ஆண்டு 3 முதல் ஆண்டு 8/9 வரையான வகுப்பு மாணவர்கள் தமிழ்ப் பாடசாலைகளின் கூட்டமைப்பினால் வருடந்தோறும் நடாத்தப்படும் கலாநிதி இளங்கோ வேந்தனார் ஞாபகார்த்த புலமைப் பரீட்சையில் தோற்றியிருந்தார்கள். இப்பரீட்சை பெறுபேறுகளும் மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா தொடர்பான அறிவித்தல்களும் எமது பாடசாலைக்கு கிடைக்கப்பெற்றதும் தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

### 3. *பேச்சுப்போட்டி*

**புகைப்படங்களைப் பார்வையிட இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :**

எமது பாடசாலையின் வருடாந்த பேச்சுப்போட்டி இவ்வருடமும் எமது பாடசாலை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இப்போட்டியில் எல்லா வகுப்பு மாணவர்களும் பங்குபற்றியதுடன் அனைத்து நடுவர்களின் பாராட்டுக்களையும் அவர்கள் பெற்றது மிகவும் பெருமைப்பட வேண்டிய விடயமாகும். இப்பேச்சுப் போட்டியில் மாணவர்கள் திறமையாக மேடையில் பேசுவதற்கு உதவிய ஆசிரியர்கள், பெற்றோர்களுக்கு எமது பாடசாலையின் நிர்வாகத்தின் சார்பில் மனமார்ந்த பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கினறோம்.

### 4. *அமைச்சர் விருது - 2021* (Minister Award)

இந்த வருடம் எமது பாடசாலையில் இருந்து அமைச்சர் விருது பெறுவதற்கு எமது கல்விக்குழுவினால் தெரிவுசெய்யப்பட்ட கீழ்குறிப்பிடப்பட்ட இரு மாணவர்களும் 2021 ஆண்டிற்கான விருதினை பெற்றுள்ளார்கள்.

| | |
|---|---|
| **யதுசன் முரளீதரன்** | மேற்பிரிவு – பரிந்துரை விருது |
| **யாழவன் தமிழ்ச்செல்வன்** | கீழ்பிரிவு – மிகவும் பரிந்துரை விருது |

இந்த இரண்டு மாணவர்களையும் மவுண்ட்றூயிட் தமிழ்க் கல்வி நிலையம் தனது மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

### 5. *கலைவிழா*

எமது பாடசாலையின் வருடாந்த கலைவிழா தற்போதைய கோவிட் பெருந்தொற்றின் காரணமாக பிற்போடப்பட்டுள்ளது என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

### 6. *பாடசாலை நேரம்*

பிள்ளைகளை இணையவழி கற்றலுக்கு உரிய நேரத்திற்கு இணைப்பினை ஏற்படுத்தி இணைவதுடன் ஆசிரியர்களால் பரிமாறப்படும் தங்களது வகுப்புக்குழு தகவல்களை எப்போதும் கவனத்தில் எடுக்குமாறும் தங்களை தயவாக கேட்டுக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| ஆரம்பமாகும் நேரம் : | பி.ப. 2.00 மணி |
| இடைவேளை : | பி.ப. 3.15ல் இருந்து பி.ப. 3.30 மணி வரை |
| முடிவடையும் நேரம் : | பி.ப. 4.30 மணி |

7. *பேச்சுத் தமிழ் வகுப்பு ( Spoken Tamil Class)*

பேசப்படாத மொழி புவியில் நிலைத்திருப்பதில்லை. எனவே எமது பாடசாலை தமிழ் மொழியை என்றும் எம்சந்ததியினரிடம் நிலைத்திருக்க செய்வதற்கான ஒரு முயற்சியாக பேச்சுத் தமிழுக்கான ஒரு வகுப்பை ஆரம்பித்துள்ளது. எனவே ஆர்வமுள்ள புதிய மாணவர்களை எமது நிர்வாக தலைவர் அல்லது அதிபரிடம் தங்களது விபரங்களை தெரிவித்து இந்த வகுப்பில் இணைந்து பயன் பெறலாம் என்பதையும் உங்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.




8. *பெற்றோர் கலந்துரையாடல்*

கடந்த 21.08.2021 சனிக்கிழமை நடைபெற்ற பெற்றோர் கலந்துரையாடலுக்கு சமுகமளித்த பெற்றோர்களுக்கு எமது நன்றிகள்.

9. *மாணவர் வரவு*

மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக வருகை தருவது அவர்களது கல்விக்கும், பாடசாலையின் வளர்ச்சிக்கும் மிகவும் முக்கியமானதாகும். அத்துடன் சமூகமொழிப் பாடசாலைகளிற்கு நியுசவுத்வேல்ஸ் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படும் மானியம் மாணவர்களின் வரவில் தங்கியுள்ளது. எனவே மாணவர்கள் தவறாமல் வருகைதரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

10. *பாடசாலைக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள்*

உங்கள் பிள்ளைகளுக்கான இந்த வருடத்திற்கான பாடசாலை கட்டணத்தை தவணை மூன்று முடிவடையும் முன் செலுத்தி எமக்கு உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். எமது பாடசாலை Creative Kids Registered Provider ஆக அங்கீகாரம் பெற்றுள்ளதால் நீங்கள் Creative Kids Voucher மூலமும் எமது பாடசாலைக் கட்டணத்தை செலுத்தலாம். எனவே பெற்றோர் கொடுப்பனவை நீங்கள் பணமாக அல்லது Creative Kids Voucher மூலம் செலுத்தலாம் என்பதை உங்களுக்கு அறியத்தர விரும்புகிறோம். மேலதிக விபரங்களுக்கு எமது கல்விநிலைய பொருளாளர் திரு.பே.மகேஸ்வரமூர்த்தி அவர்களை தொடர்பு கொள்ளவும். (தொலைபேசி இல : 0422 519 067)

11. *மாணவர்களின் விபரங்கள்*

அனைத்து மாணவர்களின் கல்வி கற்கும் பிரதான பாடசாலை, வகுப்பு, பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம், முகவரி, மின் அஞ்சல் முகவரி மற்றும் WhatsApp செயலி விபரங்கள் அடங்கிய தரவுத்தளம் (Database) பாடசாலையால் பேணப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதுவரை இவ்விபரங்களை பதிவு செய்யாத மாணவர்களது பெற்றோர்களும் மற்றும் தங்களது பதிவில் ஏதேனும் திருத்தம் மேற்கொள்ள வேண்டியவர்களும் பாடசாலை நிர்வாகத்தை தொடர்பு கொண்டு திருத்தங்களை மேற்கொண்டு தங்களது சரியான தகவல்கள் எப்போதும் பாடசாலையால் பேணப்படுவதை உறுதிப்படுத்துமாறும் தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

12. *சமாதான நீதவான் சேவை*

பெற்றோர்கள் உங்களுக்கான சமாதான நீதவான் சேவை தேவைப்படுமிடத்து சமாதான நீதவானும் எமது செயற்குழு தலைவருமான திரு.தே.கில்பேட் (தொலைபேசி இல : 0415 788 466) அவர்களை தொடர்புகொண்டு அந்த சேவையை பெற்றுக்கொள்ளமுடியும் என்பதை அறியத்தருகின்றோம்.

13. *மாணவர்கள் தமிழைக் கற்பதில் பெற்றோர்களின் ஈடுபாடு*

ஆசிரியர்கள் தமிழைக் கற்பித்தாலும் பெற்றோர்களே தங்கள் குழந்தைகளின் பிரதான கல்வியாளர்கள். எனவே பாடசாலைக்கும் வீட்டிற்கும் இடையிலான கூட்டு முயற்சியினாலேயே குழந்தையின் தமிழ் மொழி அறிவு வளரும் என்பதால் தமிழ் மொழி கற்பித்தல் பணியில் ஈடுபட பெற்றோர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

அதாவது:

- தமிழில் குழந்தைகளுடன் முடிந்தவரை பேசுவது
- வீட்டுப்பாடம் மற்றும் பிற பாடசாலை நடவடிக்கைகள் மூலம் குழந்தைகளுக்கு வழிகாட்டுதல்
- குழந்தைகளின் முன்னேற்றம் குறித்து அதிபருடன் அல்லது வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுவது
- பாடசாலை ஏற்பாடு செய்த சிறப்பு விழாக்களில் கலந்துகொள்வது
- பாடசாலை நடவடிக்கைகளில் பங்கேற்பது
- பாடசாலை நிர்வாகத்தில் இணைந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவுவது

### 14. இணையத் தளம், முகப் புத்தகம்

இவற்றினைப் பார்வையிட இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக

எமது பாடசாலை இணையத் தளமான ***www.mtsc.org.au*** மற்றும் முகப்புத்தகம் தேவையான தகவல்ளைக் கொண்டதாக தரவேற்றப்பட்டு புதுப்பொழிவுடன் அனைவரும் பயன்பெறும் வகையில் பாடசாலையினால் பேணப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.
எமது பாடசாலை முகப்புத்தக முகவரி – https://www.facebook.com/groups/374995486577634/

### 15. இணைய வகுப்பு மற்றும் கூகுள் மின்னஞ்சல் முகவரி (Zoom Class and Google Email ID)

மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் பாடசாலையுடன் கூடிய மின்னஞ்சல் முகவரி பாடசாலை நிர்வாகத்தினால் வழங்கப்பட்டுள்ளது. இவ் மின்னஞ்சல் முகவரியை எமது பாடசாலையின் தேவைக்கு மட்டுமே மாணவர்கள் உபயோகப்படுத்த வேண்டும். தயவுசெய்து மாணவர்கள் இதனை தங்களது சொந்த தேவைகளுக்கு பயன்படுத்த வேண்டாம் என கேட்டுக்கொள்வதுடன் இவ்மின்னஞ்சல் முகவரியை தவறான முறையில் பயன்படுத்துபவர்களின் பாவனையை தற்காலிகமாக இடைநிறுத்த அல்லது முற்றாக இடைநிறுத்த பாடசாலை நிர்வாகத்தி உரிமையுண்டு என்பதையும் இதனால் ஏற்படும் பிரச்சனைகளுக்கு பாடசாலை நிர்வாகம் பொறுப்பேற்கமாட்டாது என்பதையும் தங்களுக்கு தெரியப்படுத்த விரும்புகின்றோம். இது தொடர்பாக ஏதேனும் கருத்துக்கள் இருப்பின் பெற்றோர்கள் பாடசாலை நிர்வாகத்திடம் தெரிவிக்கலாம் என்பதையும் தங்களுக்கு அறியத்தர விரும்புகின்றோம்.

### 16. முன்பள்ளி மற்றும் ஆரம்பப்பள்ளி பாடப்புத்தக பயிற்சிப் புத்தகங்கள்




கடந்த வருடம் எமது 30வது ஆண்டு நிறைவை நினைவு கூர்ந்து எமது பாடசாலை மாணவர்கள் மட்டுமன்றி அனைத்து முன்பள்ளி மற்றும் ஆரம்பப்பள்ளி மாணவர்களும் பயன்பெறும் வகையில் ஒரு சிறப்பான பாட மற்றும் பயிற்சிப் புத்தகங்களை எமது பாடசாலை ஆசிரியர்கள் உருவாக்கி எமது பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் வெளியிட்டிருந்தோம். தற்பொழுது இப்பாடப்புத்தகங்களை எமது பாடசாலை மாணவர்கள் மட்டுமன்றி அவுஸ்திரேலியாவிலும் நியூசிலாந்திலும் உள்ள அனேக தமிழ்ப் பாடசாலை மாணவர்களும் பயன்படுத்தி பயனடைகின்றனர் என்பது போற்றப்பட வேண்டிய விடயமாகும்.

### 17. ஆண்டு 1 பாட பயிற்சிப் புத்தகங்கள்

நியு சவுத்வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகளின் கூட்டமைப்பினால் இந்த வருட ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட ஆண்டு 1 பாடப்புத்தகம் மற்றும் பயிற்சிப் புத்தகம் 1 உடன் தற்பொழுது பயிற்சிப் புத்தகம் 2 உம் வெளிவந்திருக்கின்றது. இக்கட்டான இந்த இடர்காலத்திலும் மாணவர்களது கற்றல் நடவடிக்கைகள் தடைப்படாது தொடர இப்பயிற்சிப் புத்தகம் 2 மாணவர்களுக்கு அவர்களது வீட்டு விலாசங்களுக்கு அஞ்சல் செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் அவற்றை பயன்படுத்தி பயனடைவதுடன் அவற்றுக்கான கட்டணங்களை இது வரை பாடசாலை வங்கிக் கணக்குக்கு வைப்பிலிடாதவர்கள் அவற்றை வைப்பிலிட்டு பாடசாலைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

### 18. சரஸ்வதி பூஜை (வாணி விழா) –09.10.2021

**நான்காம் தவணை ஆரம்பமாகும் தினமான எதிர்வரும் 09.10.2021 அன்று இணையவழி மூலம் சரஸ்வதி பூஜை (வாணி விழா) நடைபெறும்.** இது பற்றிய மேலதிக விபரங்களை பின்னர் உங்களது வகுப்பு ஆசிரியர்கள் அறியத்தருவார்கள்.

அன்றைய தினம் சரஸ்வதி பூஜை நிகழ்ச்சி நிறைவடைந்த பின்னர் வழமைபோல் இணையவழி கற்றல் தங்களது வகுப்பு ஆசிரியர்களினால் முன்னெடுக்கப்படும்.

இதனைப் பார்வையிட இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

## 19. பாடசாலை யாப்பு (MTSC Constitution)

தற்போது நடைமுறையில் உள்ள யாப்பானது பாடசாலை 30 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்படும் போது தயாரிக்கப்பட்டதுடன் இந்த முப்பது வருடங்களில் பாடசாலை துரித வளர்ச்சி அடைந்து வருவதால் காலத்தின் தேவை கருதி இந்த பாடசாலை மென்மேலும் வளர்ச்சி அடைந்து இன்னும் பற் பல மாணவ சமுதாயத்தை உருவாக்கி திறம்பட செயல்படுவதற்கு ஒரு சில மாற்றங்கள் செய்ய வேண்டியது அவசியமான ஒன்று. எனவே எமது பாடசாலையின் யாப்பினை கடந்த வருட செயற்குழு சில திருத்தங்களை செய்ய தீர்மானித்திருந்தும் தேவையான பரிந்துரைகளை தற்போதைய ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் WhatsApp மூலம் அனுப்புவதாக இவ்வருட முதலாம் தவணைக்கான பெற்றோர் கூட்டத்தில் 06/03/21 அன்று தீர்மானிக்கப்பட்டு 25/03/21 அன்றைய தினம் எல்லோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. இவ்யாப்பு திருத்தம் தொடர்பாக ஒவ்வொரு நிர்வாக கூட்டத்திலும் (22/01/21, 27/02/21) கலந்து ஆலோசிக்கப்பட்டது. இறுதியாக எமது நிர்வாகத்தினால் யாப்பு தொடர்பான விசேட கூட்டம் ஒன்று 12/6/21 அன்று கூட்டப்பட்டு திருத்தங்கள் அறிவிக்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து 24/07/21 அன்று பெற்றோர்க்கான கூட்டத்திலும் பெற்றோர்களுக்கு ஞாபகம் ஊட்டப்பட்டு இறுதியில் முழுத் திருத்தத்தையும் 21/08/21 அன்றைய பெற்றோருக்கான கூட்டத்தில் எமது நிர்வாகத்தின் செயலாளரினால் ஒவ்வொரு வசனங்களாக மக்களுக்கு வாசிக்கப்பட்டு அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டு இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. அதனைத் தொடர்ந்து முழு திருத்தங்களும் எமது நிர்வாக குழு உறுப்பினர்களுக்கும் தேவை என அறிவித்த பெற்றோர்களுக்கும் அனுப்பப்பட்டிருந்தது. அதன் முழு வடிவத்தை பின்வரும் கூகுள் இணைப்பின் ஊடாக நீங்கள் பார்வையிடலாம் என்பதனையும் தங்களுக்கு தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

https://drive.google.com/file/d/10P6h5Q5Z23LUq5qWfD4kozTv9bhfxEZs/view?usp=sharing

## 20. பாடசாலை விடுமுறை

எமது பாடசாலையின் தவணை மூன்று எதிர்வரும் **18.09.2021** அன்றுடன் முடிவடைந்து தவணை நான்கு வருகின்ற **09.10.2021** அன்று ஆரம்பமாகும் என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.

நன்றி



மவுண்ட் றூயிட் தமிழ்ப் பாடசாலை நிர்வாகம்.

## ஆத்திசூடி  Athisoodi



| | |
|---|---|
| "அறம் செய விரும்பு | " *Have desire to do good deeds* |
| ஆறுவது சினம் | *Anger should be reduced / controlled* |
| இயல்வது கரவேல் | *Help to your best possible extent* |
| ஈவது விலக்கேல் | *Don't stop doing charity* |
| உடையது விளம்பேல் | *Do not boast about your possession* |
| ஊக்கமது கைவிடேல் | *Do not give up hope/self-confidence* |
| எண் எழுத்து இகழேல் | *Do not underestimate the power of learning* |
| ஏற்பது இகழ்ச்சி | *To accept alms is a shameful act* |
| ஐயமிட்டு உண் | *Before eating, share food with those who need* |
| ஒப்புர வொழுகு | *Act with high moral standards* |
| ஓதுவது ஒழியேல் | *Never stop learning* |
| ஔவியம் பேசேல் | *Never envy / talk bad about others* |
| அஃகஞ் சுருக்கேல்" | *Do not be stingy in selling food grains"* |

- ஔவையார்
Auvaiyar

# தமிழை நேசிப்போம் ! தமிழில் பேசுவோம் !